உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீஜ்ஞாநஸம்பந்தகுருப்யோநமஃ

சித்தாந்தவுந்தியார்.

(நான்காம்பதிப்பு)

இஃது

"வைதிக சைவசித்தாந்த சண்டமாருதம்"

ஸ்ரீ ல ஸ்ரீ

சோமசுந்தர நாயகரவர்களால்

இயற்றப்பட்டது.

MADRAS:

PRINTED AT THE "MERCANTILE PRESS"

1897

இதன்விலை அணா—க.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சித்தாந்தவுந்தியார்.

விநாயகக்கடவுள்.

கலலாணிழன்மலைவில்லாரருளிய
பொலலாரிணைமலருந்தீபற
போற்றித்துதிப்பாமென்றுந்தீபற. [1]

சுப்பிரமணியக்கடவுள்

கந்தன்றிருத்தணிகைச்சலமேவிய
சங்கரன்பாலடைந்துந்தீபற
நசம்பெருவாழுவந்துந்தீபற. [2]

நடராஜவள்ளல்.

அம்பலத்தாடுமழகனடிமலர்
கும்பிட்டுப்போற்றுமென்றுந்தீபற
சுடுநறைக்கடந்தாமென்றுந்தீபற. [3]

சிவகாமியம்மையார்.

சத்தியுமையுலகீன்றபிராட்டிநம்
ஆவியெனும்படியுந்தீபற
அகலாளருள்வியந்துந்தீபற. [4]

ஆளுடையபிள்ளையார்.

ஞானசம்பந்தனடிமலர்ப்பத்தியஞ்
ஞானமகற்றுமென்றுந்தீபற
நம்பெருவாழ்வாமென்றுந்தீபற. [5]

ஆளுடையவரசுகள்.

நாவரசெம்மைநயந்தருளாரிய
ராவொன்றேமகிழ்ந்துந்தீபற
அவரடிக்கன்புசெய்துந்தீபற. [6]

ஆளுடையநம்பிகள்.

வன்றொண்டர்பாதம்வழுத்துமடியர்தம்
பின்றொண்டுசெய்வாமென்றுந்தீபற
பெற்றும்பெருமையென்றுந்தீபற. [7]

ஆளுடையவடிகள்.

மாணிக்கவாசகனார்மலர்ப்பாதநம்
மாணிப்பொன்றாகுமென்றுந்தீபற
அருள்வழிகாட்டுமென்றுந்தீபற. [8]

அறுபத்துமூன்றுநாயன்மார்.

அறுபத்துமூவரடிமலர்வாழ்த்திடிற்
பெறுமுத்திவேறிலையுந்தீபற
பேறதுவாகுமென்றுந்தீபற. [9]

மெய்கண்டசிவம்.

மெய்கண்டாள்சந்ததிவாழ்வினர்க்கேயிவை
யுண்டாமென்றுணர்ந்துந்தீபற
உண்மைநிலயமென்றுந்தீபற. [10]

அருணந்திசிவம்.

அருணந்தியார்பதமன்புசெய்தேத்திடில்
இருணந்திமாயுமென்றுந்தீபற
எமகுருநாதனென்றுந்தீபற. [11]

மறைஞானசம்பந்தசிவம்.

மறைஞானசம்பந்தர்மாணருள்வாழ்த்திடின்
இறைஞானமெய்துமென்றுந்தீபற
எல்லாவுயிர்க்குமென்றுந்தீபற. [12]

உமாபதிசிவம்.

போற்றுமுமாபதிப்புங்கவர்போதமிங்
கேற்றுஞ்சிவனிடத்துந்தீபற
எல்லாவுயிரையுமுந்தீபற. [13]

ஸ்ரீகண்டசிவம்.

சிகண்டதேசிகன்சேவடிக்கன்புசெய்
தேகண்டவாழ்விதென்றுந்தீபற
என்றும்பிறவாமையுந்தீபற. [14]

நூலின்பெயரைவிளக்குதல்.

சித்தாந்தஞானந்தெளியவுணர்த்தலாற்
சித்தாந்தவுந்தியென்றுந்தீபற
செப்புமிந்நூற்பெயருந்தீபற. [15]

பிறமதங்கள்சித்தாந்தமாகாவெனல்.

எல்லாமதங்களும்பூருவமாகையால
சொல்லார்சித்தாந்தமென்றுந்தீபற
சொற்பொருடேர்ந்தாரென்றுந்தீபற. [16]

பதிபசுபாசம்அநாதியெனல்.

பாசம்பசுபதியாகுமிம்மூன்றுநாம்
பேசிலநாதியென்றுந்தீபற
பெரியோர்சொல்வார்பயனுந்தீபற. [17]

சித்தாந்தநூல்களிவையெனல்.

உந்திசங்கற்பமுயர்போதமாதிகள்
சிந்தித்துணர்வாரென்றுந்தீபற
சித்தாந்தநூல்களென்றுந்தீபற. [18]

பதிஞானநூல்களிவையன்றிவேறுதுர்க்
கதிஞானநூல்களென்றுந்தீபற
கட்டறவிட்டோமென்றுந்தீபற. [19]

காழிப்பிள்ளையார்வாழ்த்து.

காழியில்வந்தருள்கண்மணியாருநம்
வாழ்வருள்பெற்றுமென்றுந்தீபற
வரவுபோக்கற்றுமென்றுந்தீபற. [20]

உலகாயதமதவிழ்வு.

நாத்திகம்பேசிகலிந்துழன்மூடரைப்
பார்த்தலுந்தோடமென்றுந்தீபற
பழக்கங்கொடியதென்றுந்தீபற. [21]

தேகஞ்சடமதிற்சேர்குணமுஞ்சட
மாகுமதாலுயிருந்தீபற
அக்குணமாகாதென்றுந்தீபற. [22]

சித்துபிராகுந்தெளிவுடையார்க்கது
சத்தாமொருமுதலுந்தீபற
தலைவனுமாகாதென்றுந்தீபற. [23]

தலைவனிவற்றில்வேறாகியிரண்டையும்.
அலைவறச்செய்வானென்றுந்தீபற
அவ்வப்பரிசறிந்துந்தீபற. [24]

பூதஞ்சடமாதலால தன்காரிய
பேதங்கடோன்றுமென்றுந்தீபற
பெரியோன் சிவனன்றியுந்தீபற. [25]

செய்பவரின்றியோர்செய்வினையின்றெனுந்
தெய்வவுரைதெளிந்துந்தீபற
சிவனருள்சேர்துமென்றுந்தீபற. [26]

நாத்திகப்புல்லருண்ணுணிலம்பெற
மாத்திரையொன்றினுளுந்தீபற
வகுத்தனம்போதமென்றுந்தீபற. [27]

காழிப்பிள்ளையார் வாழ்த்து.

சைவசிகாமணிசம்பந்ததேசிக
னுய்வழிகாட்டினனுந்தீபற
ஒப்பில்கருணையென்றுந்தீபற. [28]

வேதாந்தசித்தாந்தசமரசம்.

வேதாந்தஞானவிழுப்பொருள்கற்றவர்
நாதாந்தங்கண்டாரென்றுந்தீபற
நம்மையாட்கொண்டாரென்றுந்தீபற. [29]

சித்தாந்தஞானஞ்சிவோகம்பாவிக்கவே
சித்தாந்தஞ்செய்யுமென்றுந்தீபற
சிவமேநாமானேமென்றுந்தீபற. [30]

வேதாந்தசித்தாந்தவேற்றுமைகாண்பவர்
பேதாந்தப்பேயரென்றுந்தீபற
பெரியோர்துணிபிதென்றுந்தீபற. [31]

வேதாந்தப்போலிகளைவெறுத்தல்.

எல்லாஞ்சிவமென்றியம்பும்வேதத்துள்ளமை
கல்லார்கயவரென்றுந்தீபற
கற்பர்வேறாகவென்றுந்தீபற. [32]

காரணம்பொன்னதிற்காரியம்பூடணம்
ஆரணங்கூறுமென்றுந்தீபற
அறபூதியாகுமென்றுந்தீபற. [33]

காரணமூவகைபொன்முதற்காரணம்
பூரணன்சொல்வகையுந்தீபற
புகல்வாமிரண்டுவேறுந்தீபற. [34]

கம்மியனோடுகருவிநிமித்தமுஞ்
செம்மைத்துணையுமென்றுந்தீபற
சேரும்பரிசிதென்றுந்தீபற. [35]

இம்முறையன்றியியம்புவர்பித்தர்வே
றம்முறைமைகளாமென்றுந்தீபற
ஆபாசஞானமென்றுந்தீபற. [36]

மாயைமுதற்பரன்மாணுநிமித்தமிங்
காயுந்துணைசத்தியுந்தீபற
ஆகுமுலகமென்றுந்தீபற. [37]

கம்மியனோடுகருவிபொன்மூன்றுமொன்
றெம்முறைகொள்வதென்றுந்தீபற
எம்மதமேற்குமீதுந்தீபற. [38]

கம்மியனாகான்கருவியும்பொன்னுமற்
றிம்முறையாகாவென்றுந்தீபற
இரண்டுமொருமுதலுந்தீபற. [39]

கம்மியன்பாற்பொன்னிலன்றியோர்பூடணம்
செம்மைகொளாமைதேர்ந்துந்தீபற
சிவன்செயல்போற்றுவாமுந்தீபற. (40]

சிவனுயர்சித்திவன்றன்னிலுலகசித்
தெவனுதியாநிற்குமுந்தீபற
ஏற்குமாமாயையிலுந்தீபற. [41]

சிவனுயிராகானிவன்சிவனாகான்மற்
றிவராவதெப்படியுந்தீபற
இல்லாவுலகமென்றுந்தீபற. [42]

உலகமில்லாதநிலைமைவிகாரத்தா
னிலவுமதியசமுந்தீபற
நீகண்டுணர்தியென்றுந்தீபற. [43]

இல்லாவுலகமில்லாமைகொண்டெய்துமென்
றில்லாசம்பேசுவருந்தீபற
ஊகமிழந்தானென்றுந்தீபற. [44]

இல்லாவொருபொருளுண்டெனவேதமென்
சொல்லாகிற்குமறியுந்தீபற
சோம்பேறிஞானமென்றுந்தீபற. [45]

சத்திலசத்துமசத்தினிற்சத்துமிங்
கெத்திறந்தோன்றுமென்றுந்தீபற
இயம்புவதேலாதென்றுந்தீபற. [46]

சத்திலசத்துணாசெய்வாரகம்பிர
மத்தருண்டடத்தனென்றுந்தீபற
வஞ்சகப்பித்தனென்றுந்தீபற. [47]

ஓதுமசத்திலுயர்சத்துதிக்குமென்
ரோதுவர்நாத்திகருந்தீபற
ஒன்றுமறியானென்றுந்தீபற. [48]

ஏகமென்பார்சிலரத்துவிதப்பொருள்
மூகராற்றாருளுந்தீபற
முற்றும்விரோதமென்றுந்தீபற. [49]

ஒன்றற்றிரண்டற்றுபயமுமற்றதற்
றொன்றுதல்கூர்ந்துணருந்தீபற
யாத்துவிதமென்றுந்தீபற. [50]

காழிப்பிள்ளையார்வாழ்த்து.

பாலுக்கரன்வடிவந்தருதேசிகன்
காலுக்கபயமென்றுந்தீபற
கலிநசைதீர்ந்தோமென்றுந்தீபற. [51]

விஷ்ணுபாரம்யபங்கம்.

நாரணனாதிபசுக்களைமேய்ப்பவன்
காரணனாருமென்றுந்தீபற
கருதற்கினியானென்றுந்தீபற. [52]

வேதத்திலப்பசுக்கூட்டத்தையாள்பதி
மாதுக்குகந்தானென்றுந்தீபற
வந்தித்துணைக்குமென்றுந்தீபற. [53]

பாசத்தின்மூழ்கும்பசுக்களைத்தெய்வமென்
றேசெத்தொழிபவருந்தீபற
எப்படியுய்வரொன்றுந்தீபற. [54]

பிருந்தைபிறந்தமயலெய்திரோதனம்
புரிந்தவன்றேயென்பதுந்தீபற
பொருந்துவதெப்படியுந்தீபற. [55]

சிங்கவுரியையுமாலயனென்பையு
மங்கைபங்காளனென்றுந்தீபற
வாங்கித்தரித்தானென்றுந்தீபற. [56]

கரியவன்செந்நீர்கபாலத்திற்கொண்டுகம்
பெரியவன்றேனென்றுதீலுந்தீபற
பேசித்துதிப்பாமென்றுந்தீபற. [57]

பொய்த்தேவுபேசிப்புலம்புமவலர்தம்
பற்றேறதும்வேண்டாமென்றுந்தீபற
பற்றிடிற்பாவமென்றுந்தீபற. [58]

மாயவன்றேவெனின்மாதேவன்பக்கல்சார்ந்
தாயதன்கண்ணிடந்துந்தீபற
அர்ச்சித்ததென்கொலென்றுந்தீபற. [59]

கண்ணிடந்தர்ச்சித்தகாரணத்தாலவன்
கண்ணனெனும்பெயருந்தீபற
கண்டனருகுமென்றுந்தீபற. [60]

அன்பிற்சிறக்குமவனுக்கரனன்று
தன்பக்கலாழிதந்துந்தீபற
தானருள்செய்தானென்றுந்தீபற. [61]

மாலயனாதிபசுக்கள்கடவுளர்
போலிருப்பாரவருந்தீபற
போற்றும்பதியாகாருந்தீபற. [62]

காழிப்பிள்ளையார்வாழ்த்து.

இன்பந்தரவல்லவீசன்றிருஞான
சம்பந்தநாதனென்றுந்தீபற
தன்னிகரில்லானென்றுந்தீபற. [63]

பாஷ்யவிவரணம்.

வியாதனுரைத்தமிகுசூத்திரப்பொருள்
பேதம்படப்பலருந்தீபற
பேசினர்வேறுவேறுந்தீபற. [64]

சங்கரரானந்ததீர்த்தருடையவர்
தங்களுரைநமக்குந்தீபற
சழக்குரையாகுமென்றுந்தீபற. [65]

சீகண்டதேசிகர்நன்கருள்செய்யுரை
மெய்கண்டுணர்வாமென்றுந்தீபற
ஏத்துமாபாடியமுந்தீபற. [66]

பஸ்மருத்ராக்ஷவைபவம்.

நீறுபுனைந்துநிமலனடிக்கன்பு
மீறுமவர்தமக்குந்தீபற
மேல்வீடுவந்ததென்றுந்தீபற. [67]

பூதியிலாமதிகேடர்முகாலோப
ஞாதிகளாகாவென்றுந்தீபற
அஞ்சுவர்மேலோரென்றுந்தீபற. [68]

கண்டிகைபூண்டுகவின்செயுமன்பர்க்குத்
தொண்டுசெய்வாமுவந்துந்தீபற
சுருதிக்கிசையவென்றுந்தீபற. [C9]

வேதத்திற்கண்டிகைபூதியல்லாலமேவு
போதிப்பதில்லையென்றுந்தீபற
போற்றுவர்மேலோரென்றுந்தீபற. [70]

ஞானங்கமாவதுபூதியென்றேமறை
தானுங்குணர்த்துமென்றுந்தீபற
சம்பந்தர்தந்ததென்றுந்தீபற. [71]

காழிப்பிள்ளையார்வாழ்த்து.

எம்பந்தநீங்கவெழுந்தருள்காரணர்
சம்பந்தநாதரென்றுந்தீபற
சமயத்தலைவரென்றுந்தீபற. [72]

போலிவைதிகர்பொய்யொழுக்கம்.

வேதியரென்னும்பெயர்மாத்திரம்பெற்று
நீதிமுறைகப்பியுந்தீபற
நீறிடுவார்சிலருந்தீபற. [73]

உலக்கையிற்பூணென்றேளிருமலர்கரக்
திலக்கமில்லோசைகளுந்தீபற
இடத்தெரியாமனீறுந்தீபற. [74]

ஆகமத்தன்றியணியும்விதிநீறு
யோகிகள்காணென்றுந்தீபற
யூகித்தறிவாமென்றுந்தீபற. [75]

அங்குலங்கண்டணியும்விதியாகமம்
அங்கப்படியுரைத்தாந்தீபற
அருளுமறிவாமென்றுந்தீபற. [76]

ஆகமங்கைவிட்டபாதகர்வேதத்தைப்
போகவிட்டார்மறந்துந்தீபற
பொய்வேடக்காரரென்றுந்தீபற. [77]

வேதப்பசுவதன்பாலுயராகம
மாதலறிந்திலருந்தீபற
அஞ்ஞானபந்தரென்றுந்தீபற. [78]

ஆகமம்வேண்டாதபாவிகள்கோயிலிற்
போகலொட்டோமினியுந்தீபற
புகல்வாம்விதியெடுத்துந்தீபற. [79]

வேதியனுவான்விபூதியைப்போற்றானேல்
சாதிப்பறையனென்றுந்தீபற
சாதித்துரைப்பாமென்றுந்தீபற. [80]

காழிப்பிள்ளையார்வாழ்த்து.

ஆச்சாபுரத்திலனந்தமுயிர்க்கன்று
பேச்சோடுளந்தவிருந்தீபற
பேரின்பம்வாய்த்ததென்றுந்தீபற. [81]

சித்தாந்தவுந்தியார்.

[illegible]பதகாரணர்சிவபெருமானெனல்.

[illegible]க்கபதத்தொளியாவான்சிவனெனுந்
தாககமிசைப்பாமென்றுந்தீபற
சாத்திரங்காட்டியென்றுந்தீபற.

காயத்திரிப்பொருள்கணுதலெனகைகன்
காயத்தெரியுமென்றுந்தீபற
அருமறைகூறுமென்றுந்தீபற.

அகாததுயர்பொருளங்கணமொன்றுகாம்
பகரத்துணிந்தாமென்றுந்தீபற
பழமறைசொற்படியுந்தீபற.

ஓதும்பிரணவத்துட்பொருளாமதுமை
காதலறைகுமென்றுந்தீபற
கங்கைமணாளனென்றுந்தீபற.

சிவலிங்கபூசைசெய்தன்றிபொ
பவமிருகுமாயாமொன்றுந்தீபற
பகதிநெறிவதிந்துந்தீபற.

பூசையில்லார்மலபோசனஞ்செய்வமென்
றோசுமன்றேமறையுந்தீபற
இயற்றுவர்மேலோரென்று.

இந்திரனசெய்பூசைநீலலிஙகத்துமென
றுந்தியுரைப்பாமென்றுந்தீபற
உரைமறையென்றுணருந்தீபற.

பஙகயன்பூசைபடிகலிஙகத்திலென்
றிஙகிசைப்பாமுவந்துந்தீபற
இயம்புமெசுர்மறையுந்தீபற.

மாலவன்பூசைமரகதலிஙகத்தின
சாலுமீதுண்மையென்றுந்தீபற
சதுர்மறைகூறுமென்றுந்தீபற.

காழிப்பிள்ளையார்வாழ்த்து

சண்முகன்ஞானசம்பந்தனென்றேயிந்த
மண்மிசைவந்தானென்றுந்தீபற
மாணருள்செய்தானென்றுந்தீபற.

மண்பூசுவாரிழிவு.

மண்குழைத்திட்டார்மறையிழந்திட்டாரா
பிறன்குணத்தாமெமக்குந்தீபற
எண்குணம்வாய்க்குமென்றுந்தீபற. [92]

குடுண்டதேகந்தொடிற்படிந்தேகங்கை
ஆடுவர்மேலோரொனறுந்தீபற
அப்பவநீங்கவென்றுந்தீபற [93]

கௌதமரிட்டபெருஞ்சாபத்தினவழி
கௌடதமிலலேயென்றுந்தீபற
அழிவரந்தோபவத்துந்தீபற. [94]

குருமுதலினோர்வாழ்த்து

கற்பிதம்பா[redacted]ல நாலாலுனை
[redacted]புதனோ[redacted]ந்தீபற
ஆவனென்[redacted]கிழ்ட்டுந்தீபற.

ஒருமொழி[redacted]ன்னவுளவறிவார்நம்
இருமையுமா[redacted]மெ ுந்தீபற
மனறுமபெரியனோனறுந்தீபற. [9[redacted]]

திருவிசைப்பா[redacted]சததார்முதனம்மை
தரும்அருள்[redacted]மென்றுந்தீபற
தன்னியரானே[redacted]ன்றுந்தீபற. [97]

கண்ணன்முடிமிசைக்கால்வைததகேசிர
ரொன்னுமெந்தெய்வமென்றுந்தீபற
இன்னருள்செய்தானென்றுந்தீபற. [98]

தொண்டர்புராணந்துகளறச்செய்தவர்
தொண்டர்தந்தொண்டுசெய்துந்தீபற
தொல்வினைதீர்ப்பாமென்றுந்தீபற. [99]

ஆரியர்நால்வர்பதமலர்வாழிநல்
லாரியம்வாழியென்றுந்தீபற
அருந்தமிழ்வாழியென்றுந்தீபற.

ஸ்ரீசம்பந்தநீர்த்தசரணரவிந்தார்ப்பணமஸ்து.

திருச்சிற்றம்பலம்.